IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No. 78/2020**

| DEPOSITION OF WITNESS | PW.5 |
|---|---|

| NAME | ரேணு |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 15.03.2024

பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை

1.எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. கெங்கையம்மன் சம்பந்தமாக சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. கெங்கையம்மன் கோவிலை 2007 ஆம் ஆண்டு கட்டி முடிக்கவில்லை. 2007 ஆம் ஆண்டு கோவிலை பாதியில் கோபுரம் கட்டிய நிலையில் இருந்தது அதில் சிலை வைப்பதற்காக சுப்பிரமணியிடம் மாயவேலு ஒப்பந்தம் போட்டார். அந்த ஒப்பந்தம் குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகத்தில் போடப்பட்டது.

2. குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகத்தில் எத்தனை அலுவலகம் செயல்படுகிறது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகத்தில் புளியமரத்தின் அடியில் அமர்ந்து அந்த ஒப்பந்தம் எழுதப்பட்டது. அந்த ஒப்பந்தம் போடும் பொழுது மாயவேல், சுப்பிரமணி மற்றும் சுப்பிரமணி மகள் இருந்தார்கள்.

3.சுப்பிரமணி மகள் வயது எனக்கு தெரியாது. தோரயமாக அவருக்கு சுமார் 20 வயதிருக்கும். இந்த ஒப்பந்த பத்திரம் காலையில் எழுதப்பட்டது நேரம் சரியாக தெரியாது. ஒப்பந்த பத்திரம் 4 பக்கங்கள் உள்ளது. அதில் மாயவேலும், சுப்பரமணியும் 4 பக்கங்களிலும் கையொப்பம் செய்தார்கள். நான் அதில் 4 வது பக்கத்தில் மட்டும் கையொப்பம் செய்தேன். என்னுடைய கையெழுத்து 3 வது கையெழுத்து ஆகும்.

4. அந்த ஒப்பந்த பத்திரத்தில் என்ன எழுதி உள்ளது எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அந்த ஒப்பந்தம் 7,46,000 க்கு போடப்பட்டது. நானும் மாயவேலும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள். மாயவேலுக்கு நான் சின்ன மாமனார் என்றால் சரியல்ல. அவர் எனக்கு உறவினர் அல்ல.

5. அந்த ஒப்பந்த பத்திரத்தில் எழுதியவர் யார் என்று குறிப்பிட்டு கையெழுத்து போட்டுள்ளார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மாயவேலு எனது மனைவியின் தங்கை மகளை திருமணம் செய்து கொண்டாரா என்றால் இல்லை.

6.ஒப்பந்தம் கணிணியில் பிரிண்ட் செய்யப்பட்ட ஒப்பந்தமாகும். எனது மனைவியின் தங்கை பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. எனது மனைவியின் தங்கை தற்போது உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்று ஞாபகம் இல்லை.

7. எனது சொந்த ஊர் மேல்வழித்துணையாங்குப்பம் ஆகும். அதில் தான் வசித்து வருகிறேன். நான் மேல்வழித்துணையாங்குப்பம் ராமர் கோவில் தெருவில் கதவு எண். 5/2 ல் வசித்து வருகிறேன். எனது ஆதார் அட்டையில் 5/2 என்று உள்ளதால் என்றால் அதில் மாறி இருக்கலாம்.

8. கோவிலை கட்டி ராஜகோபுரத்தில் சிலை வைப்பதற்காக ஒப்பந்த பத்திரம் போடப்பட்டது. அந்த கோவிலை 2007 ல் கட்ட ஆரம்பித்தார்கள் எப்போது அந்த கோவிலை கட்டி முடிக்கபட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை.

9. ஒருவர் ஸ்தபதியாக இருக்க வேண்டுமென்றால் அவர் சான்றிதழ் வைத்திருக்க வேண்டும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவர் தான் கோவிலின் சிற்பி ஆவார்.

10 எனது பிரமாண வாக்குமூலத்தில் ராஜகோபுரம் கட்டுவதற்காக ஒப்பந்தம் போடப்பட்டது என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். ராஜகோபுரம் கட்டுவதறகாக தான் ஒப்பந்தம் போடபட்டது.

11. கோவிலை கீழே கட்டியது வேல் முருகன் என்பவர் ஆவர் அதற்கும் ஒப்பந்தம் போடப்பட்டது அதிலும் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். பெரியபைய கவுண்டர் மகன் கிருஷ்ணசாமி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

12. அந்த கோவிலின் மின் இணைப்பை மாயவேலுவின் தந்தை சந்திரசேகர் வாங்கினார். அந்த ஒப்பந்த பத்திரத்தின் சிலை வைப்பதற்கு தரை அளவு 36 க்கு 28 அடி ஆகும். நான் பார்த்தேன் அந்த அளவுக்கு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அங்கு 9 சிலைகள் உள்ளது.

13. குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகத்திலேயே உள்ளே பணிபுரிபவர்கள் அதை தட்டச்சு யெசய்தார்கள். நான் சொல்வது போல் தட்டச்சு செய்யவில்லை என்றால் சரியல்ல.

14. 10 ரூபாய் பத்திரம் 2 குடியாத்தத்தில் வாங்கப்பட்டது யார் பெயரில் எங்கு வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. 4 தாளில் இரண்டு 10 ரூபாய் பத்திரம், 2 கார்பன் தாள் ஆகும். நான் சொல்வது போல் கார்பன் தாளில் எழுதவில்லை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அன்று ரூ.3,00,000 முன் தொகையாக கொடுக்கப்பட்டது 500 ரூபாய் தாள்களாக கொடுக்கப்பட்டது. தற்போது புழக்கத்தில் உள்ள 500 ரூபாய் தாள் தான் கொடுக்கப்பட்டது.

15. தற்போது புழக்கத்தில் உள்ள 500 ரூபாய் தாள்கள் ஒப்பந்த போடும் போது புழக்கத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதிலேயே தெரிகிறது நான் சொல்வது பொய்யான சாட்சியம் என்றால் சரியல்ல.

16.இது ஊர் கோவில் ஆகும். சாட்சி நான் சொல்லவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். இது ஊர் கோவில் இல்லை. இந்த கோவிலுக்கு அறக்கட்டளை உருவாக்கி அதில் நான் உறுப்பினர் என்றால் சரிதான். அதில் 10 நபர்கள் உறுப்பினர்கள் என்றால் ஞாபகம் இல்லை. நான் ஒப்பந்த பத்திரத்தில் தமிழில் கையொப்பம் செய்தேன். மாயவேலும், சுப்பிரமணியும் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தார்கள். வேல்முருகன் தமிழில் கையொப்பம் செய்தார். நான் பார்க்கும் போது

வேல்முருகன் தமிழில் தான் கையொப்பம் போட்டார் என்னிடம் காட்டப்படும் போது வேல்முருகன் கையெழுத்து அல்ல வேலுவின் கையெழுத்து ஆகும்.

15 என்னிடம் காட்டப்படுவது வேல்முருகனின் ஒப்பந்தம் ஆகும். நான் மாயவேலுவின் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக ஒப்பந்தம் உருவாக்க பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.